**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஆரணி திருவண்ணாமலை மாவட்டம்.**

**அசல் வழக்கு எண்.80/2018**

**நாள் -26.02.2024.**

**பெயர். திரு. பெரியண்ணன் த/பெ. கோபால்.**

**வா.சா.2 சத்தியபிரமாணம் செய்யப்பட்டு 1,2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நான் ஆதனூர் கிராமத்தில் சிற்றுண்டி கடை வைத்து தொழில் செய்து வருகிறேன். வாதிகளை எனக்கு எவ்வாறு தெரியும் என்றால் நான் ஆதனூர் கிராமத்தில் வாடகைக்கு குடியிருந்தபோது வாதிகள் என் வீட்டில் இருந்து இரண்டு வீடுகள் தள்ளி குடியிருந்து வந்தார்கள்.

2. நான் கிரய பத்திரத்தில் கையொப்பம் செய்யும்போது இந்திராணி அம்மாளுக்கு அச்சொத்து உரிமை மூலம் இருந்ததா என்ற விவரம் பற்றி எனக்கு தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எந்த சொத்தை கிரயம் பதிவு செய்தார்கள் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அது வீடு ஆகும்.

3. நான் கிரயப்பத்திரத்தில் கையொப்பம் செய்யும்போது சொத்து விவரத்தில் என்னவாக காண்பிக்கப்பட்டிருந்தது என்றால் காலி மனையாக தான் காண்பிக்கப்பட்டிருந்தது. கிரயப்பத்திரத்தில் யார் சொல்லி சொத்து விவரத்தில் காலி மனை என குறிப்பிட்டிருந்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். இந்திராணி அம்மாள் தான் அவ்வாறு குறிப்பிட சொன்னார்.

4. இந்திராணி அம்மாவை சார்பதிவாளர் அலுவலகத்திற்கு யார் அழைத்து வந்தார்கள் என்றால் லட்சுமி மற்றும் கலாவதி ஆட்டோவில் அழைத்து

வந்தார்கள். அப்போது இந்திராணி அம்மாளின் கணவரும் உடனிருந்தார். எவ்வளவு தொகைக்கு கிரயம் வாங்கினார்கள் என்று எனக்கு தெரியுமா என்றால் ஞாபகம் இல்லை.

5. இந்திராணி அம்மாள் கிரயப்பத்திரம் பதிவு செய்யும்போது அவரது உடல்நலம் எவ்வாறு இருந்தது என்றால் உடம்பு சரியில்லை என்று சொன்னார்கள், ஆனால் நல்ல சுயநினைவுடன் தான் கையொப்பம் செய்தார்கள். இந்திராணி அம்மாள் கிரயப்பத்திரம் பதிவு செய்யும்போது உடல்நலம் சரியில்லாமல் இருந்தார்கள் என்றாலும், வாதிகள், இந்திராணி அம்மாளின் கணவர் மற்றும் நான் ஆகியோர் கூட்டாக சேர்ந்து கிரயப்பத்திரத்தை தயார் செய்துக்கொண்டோம் என்றால் சரியல்ல.

6. எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் சாந்தி என்பவரின் மகள் கல்யாணத்திற்காக கொடுத்த பத்திரிக்கையில் அவரது விலாசம் சேவூர் என குறிப்பிட்டுள்ளதாக சொல்லியுள்ள திருமண பத்திரிக்கையை இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

7. நான் 2017ஆம் ஆண்டு சாட்சியாக கையொப்பம் செய்த கிரயப்பத்திரத்திற்கு பிறகு வழக்கு சொத்தை பொறுத்து வேறு பத்திரங்கள் ஏதேனும் பதிவாகியுள்ளதா என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எனக்கு கிரயப்பத்திரம் ஏற்பட்ட விதத்தை பற்றி எதுவும் தெரியாது என்றாலும், வாதிகள் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

/ஒப்// பி .டி.சதீஷ்குமார்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, ஆரணி.